பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

14 11 2024 **THURSDAY** **12.40 PM**

ஆகாஷ்வாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைத் தேர்தலும், ஜார்கண்ட் சட்டப்பேரவைக்கான இரண்டாவது கட்ட தேர்தலும் வரும் 20-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் பிரச்சாரம் சூடுபிடித்துள்ளது.
- 2047-ல் வளர்ச்சியடைந்த பாரதம் என்ற கருப்பொருளுடன் 43-ஆவது வர்த்தக கண்காட்சியை மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று புதுதில்லியில் தொடங்கிவைத்தார்.
- முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.
- தமிழகத்தில் அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.
- ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

<u>*-- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<>>>>>**

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் முதல் கட்ட வாக்குப்பதிவு நேற்று முடிவடைந்த நிலையில், வரும் 20-ஆம் தேதி நடைபெறும் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவுக்கான தேர்தல் பிரச்சாரம் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது.

தேசிய ஜனநாயக கூட்டணி மற்றும் **I N D I** கூட்டணி கட்சியினரும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவர் திரு அமித் ஷா, **Bokaro, Gandey Giridih** ஆகிய மூன்று இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

உத்தரப்பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத், **Dhanbad, Bokaro** உள்ளிட்ட இடங்களில் வாக்கு சேரிக்கிறார்.

ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா மூத்த தலைவரும், மாநில முதலமைச்சருமான திரு ஹேமந்த் சோரன், தும்கா, தியோகர், பொகாரோ ஆகிய இடங்களில் தேர்தல் கூட்டத்தில் கலந்துகொள்கிறார்.

ராஷ்ட்ரிய ஜனதாதள், இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் இம்மாநிலத்தின் பல இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

<<<<>>>>>

மகாராஷ்ட்ரா மாநில சட்டப்பேரவைக்கு இம்மாதம் 20-ஆம் தேதி ஒரே கட்டமாக நடைபெறும் தேர்தலுக்கான பிரச்சாரமும் சூடுபிடித்துள்ளது.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திர மோடி, இன்று மூன்று இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.

சத்ரபதி சாம்பாஜி நகர், **Panvel** ஆகிய இடங்களில் உரையாற்றும் பிரதமர், மும்பையில் உள்ள சத்ரபதி சிவாஜி பூங்காவில் பொதுக்கூட்டத்தில் உரையாற்றவுள்ளார்.

அம்மாநிலத்தில் உள்ள மகாயுதி கூட்டணியின் தலைவர்களும் மாநிலத்தின் பல இடங்களில் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

மத்திய அமைச்சர் திரு நிதின்கட்கரி, **Solapur, Sangli, Dharashiv** ஆகிய இடங்களில் வாக்கு சேகரிக்கிறார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் மூத்த தலைவருமான திரு ராகுல்காந்தி, **Nandurbar, Nanded** ஆகிய இடங்களிலும், அக்கட்சியின் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, **Pune, Igatpuri** ஆகிய இடங்களிலும் பிரச்சாரம் மேற்கொள்கின்றனர்.

<<<<>>>>>

43-ஆவது சர்வதேச வர்த்தக கண்காட்சியை மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு பியூஷ் கோயல் இன்று புதுதில்லியில் உள்ள பாரத் மண்டபத்தில் தொடங்கிவைத்தார்.

14 நாட்கள் நடைபெறும் இந்த சர்வதேச வர்த்தக கண்காட்சியின் கருப்பொருள் “2047-ல் வளர்ச்சியடைந்த பாரதம்” என்பதாகும்.

ஜார்கண்ட் மாநிலத்தின் வர்த்தகத்தை பெருக்குவதற்கு இந்த வர்த்தக கண்காட்சியில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

பீகார், உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களும் அடுத்தக்கட்டமாக முக்கிய மாநிலங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டு வர்த்தக கண்காட்சியில், சீனா, எகிப்து, ஈரான், தென்கொரியா, தாய்லாந்து, துருக்கி, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட 11 நாடுகள் பங்கேற்றுள்ளன.

இதில் முதல் ஐந்து நாட்களில் தொழில் வர்த்தகப்பிரிவினர் மட்டும் கண்காட்சியை பார்வையிடுவர்.

அதன்பின்னர், இம்மாதம் 27-ஆம் தேதிவரை பொதுமக்களும் இந்த கண்காட்சியை பார்வையிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>>

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேருவின் பிறந்த நாள் இன்று குழந்தைகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி, ஜவஹர்லால் நேருவுக்கு சமூக வலைதளத்தில் புகழாரம் சூட்டியுள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் விடுத்துள்ள குழந்தைகள் தின வாழ்த்துச் செய்தியில், நமது கனவுகளை குழந்தைகள்மேல் சுமத்தாமல், அவர்களது கனவுகள் நிறைவேற துணை நிற்போம் என்று கூறியுள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள ஜவஹர்லால் நேருவின் சிலைக்கு, மாநில அரசு சார்பில் அமைச்சர்கள், மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி, குழந்தைகள் தினத்தையொட்டி, மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தமது வாழ்த்துகளை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

ஒவ்வொரு குழந்தையின் தனித்திறமையை புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு அவர்களை வழிநடத்த வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கும், ஆசிரியருக்கும் உள்ளதாக தெரிவித்தார்.

*(வாய்ஸ் பைட் - அன்பில் - 52 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

தில்லி மாநகராட்சி மேயரை தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று பிற்பகல் நடைபெறுகிறது.

தேர்தல் அதிகாரியாக பிஜேபி மாநகராட்சி கவுன்சிலர் திரு சத்திய சர்மாவை, துணை நிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா நியமித்துள்ளார்.

250 உறுப்பினர்கள் கொண்ட தில்லி மாநகராட்சி கவுன்சிலில் ஆம் ஆத்மி கட்சிக்கு 127 கவுன்சிலர்களும், பிஜேபி-க்கு 114 கவுன்சிலர்களும் உள்ளனர்.

காங்கிரஸ் கட்சி சார்பில் எட்டு உறுப்பினர்கள் உள்ளனர்.

<<<<>>>>>

தமிழக அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளுக்கு அருகே புறக்காவல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை கீழ்பாக்கம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும், மருத்துவர் பாலாஜியை இன்று நேரில் சந்தித்து அவரது உடல்நலன் குறித்து கேட்டறிந்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், அரசு மருத்துவமனைகளில் பாதுகாப்பை வலுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

மருத்துவமனைகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதனிடையே, தமிழகத்தில் உள்ள 37 அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளின் முதல்வர்களுடன் அங்குள்ள பாதுகாப்பு மற்றும் சிகிச்சை வசதிகள் குறித்து திரு மா. சுப்பிரமணியன், காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

<<<<>>>>>

நெல்லை மாவட்ட மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை பெய்துவருவதையடுத்து, மணிமுத்தாறு அருவியில் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக, சுற்றுலாப்பயணிகள் அருவியல் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - திருமலைக்குமார் - 30 செகண்ட்ஸ்)*

<<<<>>>>>

தலைநகர் தில்லி மற்றும் புறநகர் பகுதிகளில் காற்றின் தரம் மேலும் மோசமடைந்துள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று காலை காற்று மாசின் அளவு 432-ஆக பதிவாகியுள்ளது.

<<<<>>>>>

சபரிமலை செல்லும் பக்தர்கள் வசதிக்காக தென் மத்திய ரயில்வே 26 சிறப்பு ரயில்களை இயக்குகிறது.

இந்த ரயில்களில் இரண்டாம் வகுப்பு மற்றும் குளிர்சாதன வசதி கொண்ட முதலாவது, இரண்டாவது மற்றும் மூன்றாவது வகுப்புகளும், படுக்கை வசதி கொண்ட பெட்டிகளும், பொதுப்பெட்டிகளும் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ரயில்களுக்கான கால அட்டவணையை முன்கூட்டியே அறிந்துகொண்டு தங்களது பயணத்தை திட்டமிடுமாறு தென்மத்திய ரயில்வே கேட்டுக்கொண்டுள்ளது.

<<<<>>>>>

இலங்கையில் நாடாளுமன்றத் தேர்தல் இன்று காலை ஏழு மணிமுதல், பொதுவாக அமைதியாக நடைபெற்று வருகிறது.

மொத்தம் உள்ள 225 இடங்களுக்கு 8 ஆயிரத்து 800 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயக்கே தலைமையில் புதிய அரசு அமைந்துள்ள நிலையில், அவருக்கான பெரும்பான்மையை நாடாளுமன்றத்தில் உறுதி செய்ய வேண்டியது அரசுக்கு முக்கிய தேவையாக உள்ளது.

இதனிடையே, இன்று காலை பத்து மணி நிலவரப்படி, 28 சதவீத வாக்குகள் பதிவாகியிருந்தன.

இலங்கை அதிபர் திரு அனுர குமார திசநாயக்கே, பிரதமர் டாக்டர் ஹரிணி அமர சூரியா, முன்னாள் அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே ஆகியோர் இன்று காலையில் தங்களது வாக்குகளை செலுத்தியதாக எமது கொழும்பு செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

ஆசிய மகளிர் சாம்பியன் கோப்பை ஹாக்கிப்போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

பீகார் மாநிலம் ராஜ்கீரில் நடைபெறவுள்ள இப்போட்டி மாலை மணி 4.45-க்கு தொடங்குகிறது.

<<<<>>>>>

ஆஸ்திரேலியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் வைதேகி சௌத்ரி காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

பிரிஸ்பெயினில் இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 6-3, 6-4 என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Talia Gibson** –னை வென்றார்.

--------

புரோ கபடி லீக் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் உத்தரப்பிரதேசம் - தெலுகு அணியையும், தமிழகம் - மும்பை அணியையும் எதிர்கொள்கின்றன.

<<<<>>>>>

ஜப்பான் மாஸ்டர் பேட்மிண்டன் போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், இந்தியாவின் பி வி சிந்து தோல்வியடைந்தார்.

<<<<>>>>>